விவரமான அளவிலே பேசியிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் HUDCO மூலமாகக் கடன் வழங்குவது இல்லை என்கிறார். நான் இதுசம்பந்தமாக HUDCO–வினுடைய அலுவலகத்திலே பேசிவிட்டுத்தான் இந்தத் தகவலை அவைக்குக் கூறியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி டி. யசோதா.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்களுடைய காலத்திலே, இந்தக் குடிசைமாற்று வாரியத்திலே குடியிருக்கின்றவர்களுக்கு, ஓதுக்கீட்டிலே வசித்து வருகின்றவர்களுக்கு, அந்தந்த வீடுகள் அவர்களுக்கே சொந்தம் என்கிற நிலையில், அந்தத் தொகையை அவர்கள் சிறிது சிறிதாகக் கட்டி உரிமையாக்கிக் கொள்ளலாம் என்ற அந்தத் திட்டம், இன்றைக்கும் நடைமுறையில் இருக்கிறதா; இல்லை, அதற்கும் மூடுவிழா நடந்துவிட்டதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் இன்னும் நடைமுறையிலே இருந்துகொண்டிருக்கிறது. அதைத் தாராளமாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் குடிசைப் பகுதியிலே வாழ்கின்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்கள் அதனை உரிமையாக்கிக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) குறுகிய கால வினா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா எண் 1, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

1–

பெண் மருத்துவர்கள்

***9423–திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் சராசரியாக மாதம் ஒன்றுக்கு எத்தனை பிரசவம் நடைபெறுகிறது?

[2001 செப்டம்பர் 7

(ஆ) அங்கு பிரசவம் பார்க்க பெண் மருத்துவர்கள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், போதிய பெண் மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சராசரியாக மாதம் ஒன்றுக்கு 54 பிரசவம் நடைபெறுகிறது.

(ஆ) அறியும்.

(இ) இம்மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த மருத்துவர்கள் 5 பேர். தற்போது 4 ஆண் மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர். ஒரு பெண் மருத்துவர், பணி மாறுதல் மூலம் நியமனம் செய்யப்பட்டும், அவர் இன்னும் பணியில் சேரவில்லை. அந்தக் குறையைப் போக்கும்வகையில் வாரம் இருமுறை அதாவது செவ்வாய், வெள்ளி ஆகிய இரு தினங்களில் அருகிலுள்ள ஜலகண்டபுரம் அரசு மருத்துவமனையிலிருந்து பெண் மருத்துவர், இந்த மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை அளித்து வருகிறார்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி அரசு மருத்துவமனையிலே கிட்டத்தட்ட 3 ஆண்டுகாலம் பெண் மருத்துவர் நியமிக்கப்படவில்லை. தற்போது ஒரு பெண் டாக்டர் 6 மாதத்திற்கு முன்னாள் நியமிக்கப்பட்டு, அவர் நீண்ட விடுப்பிலே சென்றுவிட்டார். அங்கு பெண் டாக்டர் இல்லை. அங்கே சராசரியாக மாதம் ஒன்றுக்கு 54 பிரசவம் நடைபெறுகிறது என்று அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். எடப்பாடி தொகுதி, அமைச்சர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். அங்கு மிகமிகப் பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், ஏழை எளிய தாய்மார்களும் நிறைந்திருக்கிறார்கள். அங்கே ஆண் டாக்டர்கள் பிரசவம் பார்ப்பதால், பெண்கள் சற்று மனக்குறைப்படுகிறார்கள். அந்தக் குமுறலையெல்லாம் நான் இந்த மாமன்றத்திலே வைக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரசவத்திற்குப் பின்னால், பெண்களுக்கு இரத்தப் போக்கு, கருப்பையிலே புண் முதலியவற்றைப்பற்றி ஆண் டாக்டர்களிடம் சொல்ல சில பெண்கள் கூச்சப்படுகிறார்கள். ஆகவே, உடனடியாக தாலுகா மருத்துவமனையாகிய எடப்பாடி அரசு மருத்துவமனையிலே பெண் டாக்டரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

2001 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக பெண்கள், குழந்தைகள் ஆகியவர்களின் மருத்துவத் தேவைக்கு ஒவ்வொரு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பெண் டாக்டர்கள் நியமிக்கப்பட வேண்டிய அவசியத்தை இந்த அரசும் உணர்ந்திருக்கிறது. அந்த அடிப்படையில்தான் பெண் டாக்டர்களை நியமிப்பதற்கு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை எடுத்து, இப்போது அந்தப் பணி நடந்து வருகிறது. T.N.P.S.C. மூலமாக 350 பெண் டாக்டர்களை நியமனம் செய்வதற்கு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அந்த நியமனங்களிலே எடப்பாடி மருத்துவமனைக்கு முன்னுரிமை அளித்து அங்கே உடனடியாக பெண் டாக்டர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவிலே பெண் டாக்டர் நியமிக்கப்படுவார் என்று சொன்னார். அதற்காக அமைச்சருக்கு நன்றி. அங்கு இருக்கக்கூடிய உள் நோயாளிகளுக்கு உணவு கொடுக்கப் படுவதில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? ஆம் எனில், அங்கு இருக்கக்கூடிய உள் நோயாளிகளுக்கு உணவு வழங்க இந்த அரசு எவ்வகையிலே திட்டம் தீட்டியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்ட படுக்கைகள் 50. ஒரு நாளைக்கு சராசரியாக 15 முதல் 20 வரை உள் நோயாளிகள் அங்கே இருந்து வருகிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப்போல, அந்த மருத்துவமனையில் உள் நோயாளிகளுக்கு – சாப்பாடு வசதி இருந்தும் நீண்ட நாட்களாக இன்னும் சொல்லப்போனால் நீண்ட வருடங்களாக – சாப்பாடு கொடுப்பதில்லை என்பது உண்மைதான். ஆனால், அதற்கான முறையீடு அரசுக்கு வந்தவுடன், அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. 6,000 ரூபாய் சாப்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டு, அந்தப் பணி அங்கே நடைபெறாத காரணத்தினாலே அந்தப் பணம் திரும்ப

ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில், Gas Kitchen இருக்கிறது; சமையலாளரும் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனால், உணவு இதுவரை கொடுக்கப்படவில்லை. இந்தக் குறைபாடு அரசினுடைய கவனத்திற்கு வந்தவுடன், உடனடியாக ரொட்டி, பால் கொடுப்பதற்கான ஏற்பாட்டை நான் செய்யச் சொல்லியிருக்கிறேன். மற்றபடி உள் நோயாளிகளுக்கு சாப்பாடு போடுவதற்கு அரிசி மற்றும் சமையல் பொருட்கள் வாங்குவதற்கான அனுமதிக்காக சம்பந்தப்பட்ட இணை இயக்குநரை, அரசுக்கு Proposal அனுப்பச் சொல்லியிருக்கிறோம். அது முடிந்தவுடன் அங்கே உள் நோயாளிகளுக்கு உணவு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கணேசன், முடிந்துவிட்டது. (குறுக்கீடு) அமைச்சரிடம் தனியாகக் கேட்டுக்கொள்ளுங்கள்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

குறுவைப் பயிரைப் பாதுகாக்க காவிரி நீரை கர்நாடக மாநில அரசு திறந்துவிட வேண்டியது பற்றி விவாதிக்க அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற இருப்பது குறித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ந. தள்வாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதியில் உள்ள தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் குறுவை